[1969 செப்டம்பர் 11

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : திராவிட முன்னேற்றக் கழகம் தமிழக அரசின் பொறுப்பை ஏற்பதற்கு முன்னால் ஏறத்தாழ 80,000 மனைக்கட்டுகள் கொடுக்கப்பட்டு வீடுகள் கட்டப்படாமல் விடப்பட்டிருந்தன. ஆனால் நாங்கள் பொறுப்பேற்ற பிறகு மனைக்கட்டுகள் கொடுக்கப்பட்டு வீடுகள் கட்டப்படாமல் இருக்குமானால் மீண்டும் அவைகளைத் திருப்பி எடுத்துக்கொள்ளுவோம் என்று பயமுறுத்தி கூடுமானவரையில் அவர்களை வீடு கட்ட வைத்திருக்கிறோம். அப்படி கட்டாதவர் களுக்கு இந்த அரசு ஒரு உதவித் தொகை கொடுத்து கட்டுவிக்க வேண்டுமென்றதொரு திட்டத்தை உருவாக்கி அதற்கான ஏற்பாடுகளையெல்லாம் இப்போது செய்து கொண்டுவருகிறது. மேலும் புது வீடுகள் கட்டவேண்டுமென்ற எண்ணத்தில் மத்திய அரசின் உதவித் தொகையோடு கட்டுவதற்காக ஒரு செயற் குறிப்பு மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. மத்திய அரசு அதற்கு ஒப்புதல் இன்னும் தரவில்லை. மாநில அரசு 1969–70-ல் மூன்று லட்சம் ரூபாய் மானியமாகவும் இரண்டு லட்சம் ரூபாய் கடனாகவும் ஒதுக்கி ஐந்து லட்சம் ரூபாய் செலவழித்து ரூ. 500, ரூ. 680 என்று தீப்பற்றி எரியாத வீடுகள் கட்டித் தர அரசாங்கம் முடிவு எடுத்து மாவட்ட நல அதிகாரி மூலம் எந்தெந்த மாவட்டங்களில் எங்கெங்கு வீடுகள் கட்டலாம் என்று செயற்குறிப்பு அனுப்புமாறு கேட்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் கோவை மாவட்டத்திலிருந்து மாவட்ட நல அதிகாரி செயற்குறிப்பு அனுப்புவார்களானால் இந்தத் தொகையில் வீடுகள் கட்டித் தர அரசாங்கம் நடவடிக்கைகளில் ஈடுபடும்.

திரு. விஜயரகுநாத தொண்டமான் : இப்போது வீட்டு வசதி இல்லாமல் நாடோடிகளாக இருக்கக்கூடிய நரிக்குறவர்களுக்கு இந்தக் கடன் உதவி கொடுக்கப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அவர்கள், நாடோடிகளாக இல்லாமல் குறிப்பாக ஓர் இடத்தில் தங்கி வாழக் கூடியவர்களாக இருந்தால் அவர்களுக்கு வீடுகள் கட்டித் தர அரசாங்கத்திடம் திட்டம் இருக்கிறது.

கோவை மாவட்டத்திலுள்ள அரிசன விடுதிகள்

*202 வினா.—**திரு. என். மருதாசலம் :** மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்திலுள்ள அரசினர் அரிசன மாணவ, மாணவியர் விடுதிகளில் அரசினருக்குச் சொந்தமான கட்டடங் களில் இயங்கி வருபவை எத்தனை?

(இ) வாடகை கட்டடங்களில் இயங்கி வருபவை எத்தனை ?

(உ) அவைகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்ட அரசுக்கு எண்ணம் உண்டா ?

1969 செப்டம்பர் 11]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) மாணவர் விடுதிகள் 3; மாணவியர் விடுதி 1.

(இ) மாணவர் விடுதிகள் 11; மாணவியர் விடுதிகள் 8.

(உ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் மட்டுமல்லாமல், இம் மாநிலத்திலுள்ள மற்ற மாவட்டங்களிலும், தனியார் கட்டிடங்களில் இயங்கி வரும் அரசு மாணவ விடுதிகளுக்காகக் கட்டிடங்களைக் கட்டுவது பற்றி அரசு ஏற்கெனவே பரிசீலனை செய்து வருகிறது. வரவு செலவுத் திட்டத்தில் இது குறித்து ஒதுக்கப்படக்கூடிய நிதியைப் பொறுத்து, இத்திட்டம் படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

திரு. என். மருதாசலம் : கோவை மாவட்டத்தில் சிங்கா நல்லூரில் ஒரு ஹாஸ்டல் இருந்தது. அதை பீளமேட்டிற்கு வாடகைக் கட்டடத்தில் மாற்றியிருக்கிறார்கள். சிங்காநல்லூரில் படிக்கக்கூடிய குழந்தைகள்தான் அங்கிருக்கிறார்கள். அந்த ஹாஸ்டலை இப்போது வெகு தூரத்திலுள்ள ஒரு இடத்தில் வாடகைக் கட்டடம் ஒன்றில் மாற்றியிருக்கிறார்கள். சிங்கா நல்லூரில் அரசாங்கத்திற்குச் சொந்தமான இடம் இருக்கிறது. ஆகவே அங்கு இந்த ஹாஸ்டலைக் கட்டுவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : சிங்கா நல்லூர் பற்றிய விவரம் இப்போது என்னிடம் இல்லை. ஆனால் கோவை மாவட்டத்தில்தான் மூன்று விடுதிகளும் அரசாங் கத்திற்குச் சொந்தமான விடுதிகளாக இருக்கின்றன. மற்ற மாவட்டங்களில் அப்படிக் கிடையாது. இருந்தாலும் சிங்கா நல்லூரில் கூட அவசியம் ஏற்பட்டால் கட்டலாம். அதுபற்றிய செயற்குறிப்பு இப்போது என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கிறேன்.

கரும்பு வளர்ப்புத் திட்டம்

*203 வினா.—திரு. சி. கோவிந்தராஜன்: மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரும்பு வளர்ப்பு (Sugarcane Nursery) திட்டத்தின் கீழ் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள சர்க்கரை ஆலைகளுக்கு ஆண்டு தோறும் அரசு மூலம் ஏதாவது மானியத் தொகை கொடுக்கப்படுகிறதா ?

(இ) அப்படியானால் 1964-ம் ஆண்டு முதல் இதுவரை எந்தெந்த சர்க்கரை ஆலைகளுக்கு எவ்வளவு தொகை வழங்கப் படுகிறது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.